**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**P203 படைப்பிலக்கியம்**
**ஜனவரி – பிப்ரவரி 2024**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு: பிரிவு – 1இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. இலக்கணக் கட்டுப்பாட்டுக்குள் அடங்காமல் உணர்ச்சி வெளிப்படப் பாடும் கவிதை எது?
2. புனைகதையின் இரு பிரிவுகள் யாவை?
3. நாவலின் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?
4. பாக்கள் எத்தனை வகைப்படும்?
5. கும்மிப்பாடல் என்பது என்ன?
6. நின்ற சீரின் இறுதி அசையும், வரும் சீரின் முதல் அசையும் தம்முள் பொருந்துவதை எவ்வாறு அழைப்பர்?
7. ஐக்கூக் கவிதையின் வரியளவு கூறுக.
8. இராஜம் கிருஷ்ணனின் மலைவாழ் மக்களின் வாழ்க்கையை அவர்கள் மொழியிலேயே படம் பிடித்துக் காட்டும் நாவல் எது?
9. சீன நாடகத்தின் தந்தை யார்?
10. அகிலனின் ஞானபீடப் பரிசைப்பெற்ற நாவல் எது?
11. கதைப்பின்னல் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
12. மாதவி ஆடிய ஆடல்கள் எத்தனை?
13. இறையனார் களவியலுக்கு உரை எழுதியவர் யார்?

14. பள்ளு, குறவஞ்சி, நொண்டி ஆகியவை எந்த வகையைச் சார்ந்த இலக்கியம் ?
15. 'சில நேரங்களில் சில மனிதர்கள்' – என்ற நாவலின் ஆசிரியர் யார்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. மரபு கவிதை – குறிப்பு வரைக.
2. பின்னோக்கு உத்தி என்றால் என்ன?
3. பயண இலக்கிய நூல்கள் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.
4. படைப்பாளியின் தகுதிகள் யாவை?
5. சிறுகதைக்கும் நாவலுக்கும் உள்ள பொதுவான பண்புகள் யாவை?
6. கதைப்பின்னல் – விளக்கம் தருக.
7. நாவலின் முடிவு எவ்வாறு இருக்க வேண்டும்?
8. உரைநடையின் பண்புகள் யாவை?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) புதினங்களின் வகைகள் குறித்து விளக்குக.

   (அல்லது)

   (ஆ) காப்பியங்களின் அமைப்பு முறை குறித்து விளக்குக.

2. (அ) மரபுக் கவிதை, புதுக்கவிதைகளின் இன்றைய நிலை குறித்து எழுதுக.

   (அல்லது)

   (ஆ) நாவலுக்கும் சிறுகதைக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைக் குறிப்பிடுக.

3. (அ) பெண்படைப்பாளர்களின் நோக்கும் போக்கும் சமுதாய உணர்விற்கு இடமளிக்கிறதா? திறனாய்வு செய்க.

   (அல்லது)

   (ஆ) உரைநடையின் வகைகளை விளக்கி வரைக.

***